DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | **O.S : 55/2022** | | | |
| Deposition of Witness | : | **பி.சா. 2** | | | |
| Name | : | **திரு. சதிஷ்** | Occupation | : | மாவட்ட பதிவாளர் அலுவலக உதவியாளர் |
| Father's Name/ Husband | : | **திரு.சேகர்** | | | |
| Village | : | | Age | : | 39 |
| Taluk | : | **குத்தாலம்** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 20-08-2025

**முதல் விசாரணை**

நான் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில், அழைப்பாணையில் கோரியுள்ள ஆவணங்களுடன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். சண்முகம் என்பவர் எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை ரத்து செய்ய கொடுத்த ஆவணத்தை கொண்டு வந்திருக்கிறேனா என்றால் கொண்டு வந்திருக்கிறேன் . அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட அதன் நகல் **சா.சா.ஆ. 1 ஆகும்.** அவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் நோட்டீஸ் கொடுத்து விசாரணை நடைபெற்றதா என்றால் நடைபெற்றது. 2 முறை அறிவிப்பு அனுப்பப்பட்டது. முதலில் 06/01/2022 அன்று அனுப்பப்பட்ட அறிவிப்பின் நகல் **சா.சா.ஆ. 2 ஆகும்.** இரண்டாவதாக 11/04/2022 அன்று அனுப்பப்பட்ட அறிவிப்பின் நகல் **சா.சா.ஆ. 3 ஆகும்.** அவ்வாறு அறிவிப்பு அனுப்பி சாட்சிகளை விசாரித்திருக்கிறார்கள். சாட்சிகள் பாலசுப்ரமணியன், சங்கீதா மற்றும் ஆவண எழுத்தர் ஜி .ராமலிங்கம், எதிர்மனுதாரர் சோமசுந்தரம் , எஸ்.விஜயலெட்சுமி, மனுதாரர் சண்முகம் ஆகியோரை விசாரித்திருக்கிறார்கள். அவர்களது வாக்குமூல நகல்கள் **சா.சா.ஆ.4**

**ஆகும்.** இவர்களை விசாரித்து 30/11/2022 அன்று இது முறைகேடான ஆவணம் போலி ஆவணம் என்பதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த உத்தரவின் நகல் ஏற்கனவே பி.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**3 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென தெரிவிக்கப்பட்டது.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆவணம் 5086/2021, 20/10/2021 அன்று பதிவு செய்யப்பட்டது. அந்த ஆவணத்தை நாங்கள் பார்ட்டியிடம் கொடுத்துவிட்டோம். இந்த ஆவணம் மொத்தம் 3 செட்டியூலாக பிரித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. இதே ஏ மற்றும் சி–க்கு அட்டவணை வைக்கப்பட்டுள்ளது. பி–க்கு அட்டவணை இல்லை என்றால் சரி. பி– அட்டவணை சொத்துக்கு மதிப்பு போடப்பட்டுள்ளது என்றால் சரி. ஏ அட்டவணை சொத்தின் அனெக்சரில் தரை தளம் மற்றும் முதல் தளம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. தரை தளம் 650 சதுரடியும், முதல் தளம் 650 சதுரடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி . சி அட்டவணை சொத்து அனெக்சரில் 1000 சதுரடிக்கு நாட்டு ஓடு போட்ட வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. தரை தளத்தில் மாடி படி கீழ் புறம் காட்டப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு அட்டவணையில் காட்டப்படவில்லை. பொதுவாக ஒரு பத்திரம் பதிவு செய்யப்பட்ட பிறகு கள ஆய்வு போவதுண்டு. இந்த சொத்திற்கு போனோமா என்றால் 23/10/2021 அன்று கள ஆய்வு போனோம். அவ்வாறு போவது என்பது பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிமனை மற்றும் கட்டிடத்தின் அளவுகள் சரியாக உள்ளதா என்பதை சரிபார்ப்பதற்காக போனோம் என்றால் சரி. நாங்கள் இந்த பத்திரத்தில் கண்ட சொத்தை கள ஆய்வு செய்யவேயில்லை என்றாலும் அவ்வாறு போயிருந்தால் இந்த சொத்திற்கான மாடி படி எங்குள்ளது என்ற விவரம் தெரியவரும் என்றால்

சரியல்ல. மனு சண்முகம் கொடுத்த பிறகு கள ஆய்வு பண்ணவில்லை . மாடி படிகளுக்கு தனியாக மதிப்பு குறிப்பிடப்படவில்லை என்றால் களப்பணி கோப்புகளில் அந்த விவரம் இருக்கும்.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.